பக்கங்கள் ஆறு

# வலம்புரி

விலை ரூபா 5-00

சங்கு: 1 வள்ளுவர் ஆண்டு 2031 தை 17 திங்கட்கிழமை (31 - 01 - 2000) VALAMPURI ஒலி: 43

## உரும்பிராயில் கைது செய்யப்பட்ட மாணவர்களை

# உடன் விடுதலை செய்யுமாறு கோரி

# குடாநாட்டு மாணவர்கள் பகிஷ்கரிப்பு

## மாணவர் ஒன்றியம் ஏற்பாடு

— விசேட அலுவலகச் செய்தியாளர் —

யாழ். வயாவிளான் மத்திய மகாவித்தியாலய மாணவி பிரியாவையும், அவரது சகோதரரான யாழ். உரும்பிராய் சந்திரோதய வித்தியாலய மாணவன் வினோத் ஆகிய இருவரையும் விடுதலை செய்யக் கோரி இன்று யாழ். குடாநாட்டில் உள்ள அனைத்துப் பாடசாலை மாணவர்களும் பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

இந்த இரு மாணவர்களும் இம்மாதம் 25ஆம் திகதி குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் உரும்பிராயில் வைத்துக் கைது செய்யப்பட்டு மேலதிக விசாரணைகளுக்காக கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்டிருந்தனர்.

கொழும்பு குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டவயாவிளான் மத்திய மகாவித்தியாலய மாணவி பிரியா ஸ்ரீஸ்கந்தராஜாவையும், அவரது சகோதரனான வினோத்தையும் விடுவிக்கக் கோரி யாழ். மாவட்டத்தில் உள்ள சகல பாடசாலை மாணவர்களும் பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

உருபிராயில் கைதுசெய்யப்பட்ட மேற்படி மாணவர்களை விடுவிக்கக்கோரி யா/வயாவிளான் மத்திய மகாவித்தியாலய மாணவர்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மாணவர் கைதாவதைக் கண்டித்து வட.மா.அதிபர்கள் சங்கம் அறிக்கை!

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் சந்திரோதயா வித்தியாலய மாணவன் ஸ்ரீஸ்கந்தராஜா வினோத் பாடசாலை நேரத்தில், பாடசால்லயில் வைத்துக் கைது செய்யப்பட்டது பற்றியும், அவரது சகோதரி பிரியாவை அவர்களதுவீட்டில் வைத்து கைதுசெய்தமை பற்றியும், அவர்களை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்குமாறு வடமாகாண அதிபர்கள் சங்கம் ஜனாதிபதிக்கும்; ஈ.பி.டி.பி. யின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா மற்றும் கல்வி உயர்கல்வி அமைச்சர் ஆகியோருக்கும் அறிக்கை ஒன்றினை அனுப்பிவைத்துள்ளது.

மேற்படி சங்கத்தின் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்

(6ஆம் பக்கம் பார்க்க)

## உடனடியாக விடுவிக்காவிடின் பாரதூரமான விளைவுகள் ஏற்படும்

### ஈ. பி. டி. பி. எம். பி. ஜெகன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

உரும்பிராயில் கடந்த 25 ஆம் திகதி கைதுசெய்யப்பட்ட மாணவி ஸ்ரீஸ்கந்தராஜா பிரியா உடனடியாக விடுவிக்கப்படாது விடின் யாழ்ப்பாண மக்கள் பாரதூரமான விளைகளை எதிர் நோக்க வேண்டியிருக்கும்' என்று யாழ், மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கே. வி. குகேந்திரன் (வி.கே.ஜெகன்) பாதுகாப்பு அமைச்சின் கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளார்,

'இன்று நடைபெறும் குடாநாடு தழுவிய பாடசாலை மாணவர்களின் பகிஷ்கரிப்புப்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## செட்டிகுளம் பகுதியில் கிளைமோர் தாக்குதலில் இருவர் பலி! மூவர் காயம்!!

(வவுனியா)

செட்டிகுளம்கப்பாசிச்பகுதியில் நேற்று காலை 8.30 மணியளவில் இடம்பெற்ற கிளைமோர் குண்டுத் தாக்குதலில் சப் இன்ஸ்பெக்டர் ஒருவரும், பொலிஸார் ஒருவரும் கொல்லப்பட்டுள்ளதோடு மூன்று பொலிஸார் படுகாயமடைந்தும் உள்ளதாக வன்னிப்பிராந்தியப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் இரத்தினாயக்க தெரிவித்துள்ளார்.

காயமடைந்த மூவரும்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இளைஞர் கைது

(புலோலி)

பருத்தித்துறை பிரிகேட் இராணுவ முகாம் பகுதியில் சந்தேகத்திற்கு இடமான முறையில் மோட்டார் சைக்கிளுடன்நடமாடிய இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வரணி கரம்பைக் குறிச்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## குருநாகல் - கொழும்பு பஸ்ஸில் குண்டுவெடிப்பில் 30 பேர் காயம்

(மட்டக்களப்பு)

குருநாகலில் இருந்து கொழும்பு நோக்கி சென்று கொண்டிருந்த பஸ் வண்டியில் அலவ்வ என்னுமிடத்தில் குண்டு ஒன்று வெடித்ததினால் பஸ்ஸில் பயணம் செய்த பயணிகளில் 30 பேர் காயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்கள் அனைவரும் குருநாகல் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்தவர்களில் 4 பேரின் நிலை கவலைக்கிடமாக உளளதாக ஆஸ்பத்திரி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## புதிய அரசியலமைப்புச் சட்டமூலம் பெப். 15க்கு முன் தயாரிக்கப்பட்டுவிடும்

### - டி. எம். ஜெயரத்ன தகவல் -

(கொழும்பு)

புதிய அரசியல் அமைப்புச் சீர்திருத்த சட்டமும் அடுத்த மாதம் 15 ஆம் திகதிக்கு முன் தயாரிக்கப்பட்டு விடும் என்று பொதுஜன ஐக்கிய முன்னணி செயலாளரும் அமைச்சருமான திரு. டி. எம். ஜெயரத்தினா தெரிவித்துள்ளார்.

புதிய அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டமூலம் தனித்துவத்தினை ஐக்கிய தேசிய கட்சி, மற்றும் தமிழ்க்கட்சிகளுடன் பேசிய பின்பே நான் காவதுக்ட்டமாக விடு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்புச் சிறைக் கைதிகள் அனுராதபுரம் சிறைச்சாலைக்கு?

(ஏறாவூர்)

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் மட்டக்களப்புச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 3 பெண்கள். உட்பட்ட 53 தமிழ் அரசியல் கைதிகளில் 20 பேரை அனுராதபுரம் சிறைச்சாலைக்கு இடமாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதாகத் தெரியவருகிறது.

இந் நடவடிக்கையினை உடன் தடுத்து நிறுத்துமாறு கோரி மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு. அம்பாறையில் சமாதானப் பேரணி

மட்டக்களப்பு, அம்பாறை கத்தோலிக்க மக்கள் கிறீஸ்து யூபிலியை முன்னிட்டு மாபெரும் சமாதானப் பேரணி ஒன்றை நேற்று நடத்தினர்.

இந்த சமாதானப் பேரணியை கல்முனை றோமன் கத்தோலிக்க திருச்சபையும், மெதடிஸ் திருச்சபையும் இணைந்து பேரணியை ஒழுங்கு செய்திருந்தன.

கல்முனை ''எகட்'' நிறுவனத்தின் அனுசரணையுடன் இடம்பெற்ற இச்சமாதானப் பேரணியில் மட்டக்களப்பு, அம்பாறை கத்தோலிக்க மக்கள் பெருந்திரளாகக் கலந்து கொண்டனர், (வ 60)

## உறுதிமிக்க இந்திய அரசைப் போல

## ஐக்கிய இலங்கை கோட்பாட்டின் கீழ் இனப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டும்

### குஜ்ரால் கூறுகிறார்

(கொழும்பு)

''இலங்கையைப் போலவே இந்தியாவும் பல் இன மக்கள் வாழுகின்ற நாடாக இருக்கிறது. ஆனால் அங்கு உறுதி மிக்க அரசியல் நடத்தப்பட்டு வருகிறது. எனவே இலங்கையிலும் ஐக்கிய இலங்கை கோட்பாட்டுக்குள் இனப் பிரச்சினைகளை தீர்வுக்குக் கொண்டுவர வேண்டும்.

இவ்வாறு நேற்று மாலை கொழும்பு கோல்பேஸ்

(6 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## ஜீ. ரீ. சற் பாடசாலைக்கு நிதியுதவி

(அச்சுவேலி)

ஜீ. ரீ. சற்றின் நிதியுதவியுடன் கதிரிப்பாய் சுப்பிரமணியம் வித்தியாலயத்தில் மலசலகூடம் அமைக்கும் பணிகள் ஆரம்பமாகியுள்ளன.

இதற்கென ஜீ. ரீ. சற் இரண்டே.கால் லட்சம் ரூபா நிதியுதவி வழங்கியுள்ளது.

## நெடுந்தீவில் அபிவிருத்திக் கருத்தரங்கு

நெடுந்தீவின் அபிவிருத்தி தொடர்பாககருத்துக்களைத் தெரிவிக்குமாறு நெடுந்தீவில் உள்ள சனசமூக நிலையங்கள் விளையாட்டுக்கழகங்கள் மற்றும் பொது அமைப்புக்களிடம் பிரதேசசபையினால் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்தவிடயம் தொடர்பாக நெடுந்தீவு மேற்குப் பகுதிக்கு அடுத்த மாதம் 8 ஆம் திகதியும் நெடுந்தீவு மத்திப்பகுதிக்கு 9 ஆம் திகதியும் 10 ஆம் திகதி நெடுந்தீவு கிழச்குப்பகுதிக்குமாக அபிவிருத்தி பற்றிய கலந்துரையாடல்கள் இடம்பெறவுள்ளது. (கு-4)

(க)

வீதிச்சமிக்கையை

# கவனியாது வாகனம் செலுத்தும் சாரதிகளைக் கண்டுபிடிக்கத்திட்டம்

(கொழும்பு)

கொழும்பு நகரில் வீதி சமிக்கை விளக்குகளை மதிக்காமல் வாகனம் செலுத்தும் சாரதிகளை கண்டுபிடிக்க புதிய திட்டமொன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளதாக மோட்டார் போக்குவரத்து பொலிஸ் இன்ஸ்பெக்டர் எம்.எம்.டி. மனம்பேரி தெரிவித்துள்ளார்.

இத்திட்டத் திற்கமைய சமிக்கை விளக்குகளிற்கருகில் பொலிஸார் சாதாரண உடையில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டதையடுத்து சமிக்கைகளை மீறி வாகனம் ஓட்டிச் சென்ற குற்றத்தின் பேரில் சுமார் 400 சாரதிகள் பொலிஸாரிடம் அகப்பட்டுக் கொண்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

இடது பக்கத்தில் வாகனங்களை முந்திச்சென்ற குற்றத்திற்கு 170 சாரதிகள் பொலிஸாரிடம் அகப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (கு-14)

## கடற்றொழிலாளரின் பிள்ளைகளுக்கு போதிய கல்வி வசதி இல்லாமல் பாதிப்பு!

(தென்மராட்சி)

குருநகர், பாஷையூர், கொழும்புத்துறை பகுதிகளில் வாழ்கின்ற மீனவர்கள் தொடர்ந்து ஒரு மாதத்துக்கு மேலாக மீன்பிடித்தொழிலுக்குச் செல்ல அனுமதிக்கப்படாத நிலையிலுள்ளனர்.

இதன் காரணமாக இப்பகுதிகளில் உள்ள மீன்பிடியாளர்கள் குடும்பங்கள் தமது ஜீவனோபாயத்துக்கும், பிள்ளைகளின் கல்விக்கும் பெரும் கஸ்ரங்களை எதிர்நோக்கி வருவதைக் காணக்கூடியதாக உள்ளது.

இந்தப் பகுதியில் இருந்து பாடசாலைகளுக்குச் செல்கின்ற மாணவர்களின் தொகையும் மிகவும் குறைந்த நிலையில் இருப்பது தெரியவந்துள்ளது.

பாடசாலை செல்கின்ற மாணவர்கள் தமக்குரிய அப்பியாசக் கொப்பிகள் மற்றும் கல்வி உபகரணங்கள் இல்லாத காரணத்தினாலேயே பாடசாலைகளுக்குச் செல்வதில்லை எனவும் அறியப்படுகின்றது.

மேலும் சில பெற்றோர் தாம் பெறுகின்ற நிவாரணத்தை விற்று அதன் மூலம் தம் பிள்ளைகளுக்கான கல்வி உபகரணங்களை வாங்குவதாவும் கூறப்படுகின்றது. (கு-77)

## மலர் வெளியீடு

(மந்திகை)

கரவெட்டி ஞானாசாரியர் கல்லூரி பழைய மாணவர் சங்கம் வைரவிழா மலர் ஒன்றை வெளியிடத் தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த மலரில் கல்லூரியின் கடந்த காலச் செயற்பாடுகள் மற்றும் பாடசாலை தொடர்பான விடயங்கள் உள்ளடக்கப்பட இருப்பதால் கல்லூரியினுடைய ஆவணங்கள் புகைப்படங்கள் வைத்திருக்கும் அதிபர் ஆசிரியர்கள் பழைய மாணவர்களை தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு பழைய மாணவர் சங்கஇணைச் செயலாளர் த.மகாதேவன் கேட்டுள்ளார். (கு-23)

## இராசி பலன்

31.01.2000 திங்கட்கிழமை (தமிழுக்கு தை 17)

தசமி காலை 10.19 வரை, அனுஷம் காலை 10.17 வரை, மரணயோகம், கரிநாள், இராகுகாலம் காலை 8.36 முதல் 10.04 வரை, சுப நேரம் பகல் 10.51 முதல் 2.35 வரை.

**மேடம்:** மனக்குழப்பம், வேலைப் பழு, அலைச்சல்.

**இடபம்:** எதிர்பாராத நன்மை, பெரியோர் ஆசி, பணச் செலவு.

**மிதுனம்:** சுபவிரைய செலவு, தொழில் சிறப்பு, பாராட்டு.

**கடகம்:** சிறுகுழப்பம், தொழில் கஷ்டம் வெறுப்பு.

**சிங்கம்:** கருத்துவேறுபாடு, பணமுடை, நண்பர் ஏமாற்றம்.

**கன்னி:** அதிஷ்டம், நோய்நிவர்த்தி, இனிய உறவு.

**துலாம்:** தீர்வுகிட்டாமை, அகங்காரம், தப்பித்துக்கொள்ளல்.

**விருச்சிகம்:** பிறர் ஆதரவு, மருத்துவச் செலவு, மனஉற்சாகம்.

**தனுசு:** வரட்டுக்கௌரவம், உறவினர் பகை, வாக்குக் கலகம்.

**மகரம்:** தெய்வபலம், தொழில் சிறப்பு திடீர் பயணம்.

**கும்பம்:** தியாகசிந்தை, கனிவான பேச்சு, உடன்பாடு.

**மீனம்:** விரயச்செலவு, கண்நோய், ஆதரவின்மை.

(இலங்கை நேரப்படி கணிக்கப்பட்டது)

- அனுஷியா

தீவகவலய

## ஆசிரியர்கள், மாணவர்களின் விபரங்கள்தருமாறு அதிபர்களுக்கு பணிப்பு

(அல்லைப்பிட்டி)

தீவகவலயப் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நீக்கும் பொருட்டு, தீவகப் பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்கள் கற்கும் மாணவர்கள் பற்றிய விபரங்கள் தீவக உதவிக் கல்விப் பணிப்பாளர் இ. மகேஸ்வரனால் திரட்டப்பட்டு வருகின்றது.

மேற்குறிப்பிட்ட தகவல்களை உடனடியாக அனுப்பி வைக்குமாறு அதிபர்களுக்கு பணிப்புரைகள் விடுக்கப்பட்டுள்ளன. (கு-46)

## கஞுத்துறையில் காயமடைந்த இளைஞனை யாழ். நீதிமன்றில் ஆஜர் செய்ய உத்தரவு!

(யாழ்ப்பாணம்)

களுத்துறைச் சிறைச்சாலையில் இடம்பெற்ற மோதல் சம்பவங்களின் போது கடுமையான காயங்களுக்கு உள்ளான கனேஷ் உஷானந் என்ற இளைஞனை எதிர்வரும் பெப்ரவரி 7ம்திகதி யாழ்.மாவட்ட நீதிமன்றில் ஆஜர் செய்யுமாறு யாழ். மாவட்ட நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

மேற்படி இளைஞனின் உறவினர்கள் சார்பில் ஆஜராகிய சட்டத்தரணி இளங்கோவன் தாக்கல் செய்த மனுவை தொடர்ந்தே யாழ். மாவட்ட நீதிபதி ஆர்.ரி. விக்னராஜா இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார். (கு-14)

## மட்டுவிலில் சீரற்ற மின்விநியோகம் பாவனையாளர்கள் அதிருப்தி!

(தென்மராட்சி)

மட்டுவில் நுணாவில் பகுதிகளுக்கு இலங்கை மின்சார சபையினால் ஜெனரேட்டர் மூலம் வழங்கப்படும் மின்சார விநியோகத்தில் அடிக்கடி தடங்கல்கள் ஏற்படுவதால் மின் பாவனையாளர்கள் மத்தியில் அதிருப்தியின்மை ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

மின் விநியோக வேளையில் திடீரென மின் விநியோகத்தினை நிறுத்திக் கொள்வதால் தொலைக்காட்சிப் பெட்டிகள், வானொலிப் பெட்டிகள் பழுதடையக் கூடிய நிலைப்பாடு ஏற்படுவதாகவும் பாவனையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

வன்னியிலிருந்து மோட்டார் சைக்கிளில்செல்ல

## வன்னிப்பகுதி அரச ஊழியர்களுக்கான பயண அனுமதி இனிக் கொழும்பிலேயே

இராணுவ கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதியில் கடமையாற்றும் அரச அதிகாரிகள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு மோட்டார் சைக்கிளில் வந்து திரும்புவதற்கான முன் அனுமதியை கொழும்பு பாதுகாப்புத் தலைமையகத்திலேயே பெற வேண்டும் என்று வவுனியா பாதுகாப்பு படைவட்டாரங்களிலிருந்து அறிய வருகிறது.

முன்னர் இவர்களுக்கான அனுமதி வவுனியாவில் வைத்து வழங்கப்பட்டு வந்த போதிலும் இனிவரும் காலங்களில் இவ்வகை அனுமதிகள் கொழும்பில் உள்ள பாதுகாப்பு தலைமையகத்தாலேயே வழங்கப்படும் என்று மேலும் தெரிவிக்கப்படுகிறது. (கு-14)

## மக்களிடையே எயிட்ஸ் விழிப்புணர்வு தொலைபேசி மூலமான உரையாடலில்!

(கொழும்பு)

இலங்கையில் முதன் முதலாக எயிட்ஸ் மற்றும் H.I.V தொற்றுத் தொடர்பாக மக்களிடையே காணப்படும் மூட நம்பிக்கைகள், தேவையற்ற பயங்களைப் போக்கும் வகையில் தொலைபேசி ஊடான ஆலோசனைச் சேவை ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

எச். எஸ் என்ற அமைப்பினால் ஆரம்பிக்கப்பட்ட இர்தச் சேவையில் ஏழு வைத்திய நிபுணர்கள் கொண்ட குழுவொன்று கடமையாற்றும் என்றும் மாலை 5 மணி முதல் 9 மணி வரையில் இக் குழுவுடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு மக்கள் தமக்குள்ள ஐயப்பாடுகளைப் போக்கிக் கொள்ளும் வரையில் ஆலோசனைகளைப் பெற முடியும் என தெரிவிக்கப்படுகிறது. (கு-7)

## தட்டெழுத்துப் பயிற்சி

(ஊர்காவற்துறை)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் யாழ்.மாவட்ட அலுவலகத்தின் அனுசரணையுடன் ஊர்காவற்றுறைப் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தினால் இளைஞர் யுவதிகளுக்கு இலவசமாக தட்டெழுத்துப் பயிற்சி நெறி ஆரம்பிக்கப்படவுள்ளதாக இளைஞர் சேவை உத்தியோகத்தர் திரு.நித்தியானந்தன் தெரிவித்தார். (கு-75)

## ஹெரோயினுடன் வந்த இளைஞன் ஆரையம்பதியில் பொலிசாரால் கைது!

(மட்டக்களப்பு)

மிக சக்தி வாய்ந்த போதைப் பொருளான ஹெரோயினுடன் வந்த இளைஞர் ஒருவர் ஆரையம்பதி சோதனைச் சாவடியில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.

'அஸ்லம்' என்ற மேற்படி இளைஞனின் பேர்சுக்குள் இருந்து பொலிஸாரினால் ஹெரோயின் பைக்கற்றுகள் மீட்கப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட இளைஞரை காத்தான்குடி நீதிமன்றத்தில் ஆஜர் செய்த போது அவரை நாளை வரை விளக்க மறியலில் வைக்குமாறு மட்டு. மாவட்ட மேலதிக நீதிவான் கா. தட்சணாமூர்த்தி உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை—

கைது செய்யப்பட்ட இளைஞனிடம் இருந்து மீட்கப்பட்ட போதைப் பொருளின் ஒரு பகுதி கொழும்பு பகுப்பாய்வுத் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்று தெரியவருகிறது. (கு-60)

## கொட்டடி வடிகால் திருத்தம்

(யாழ்ப்பாணம்)

கொட்டடி கற்குளம் வடிகால் திருத்த வேலைகள் ஆரம்பிக்கப் படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த திருத்த வேலைகளுக்காக 1 லட்சத்து 26 ஆறாயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் மாநகரசபை உறுப்பினர் தெரிவித்துள்ளார்

(க-14)


### வரவேற்கின்றோம்

வடபிராந்திய உதவி மதுவரி ஆணையாளராக
இடமாற்றம் பெற்று
கடைமையை பொறுப்பேற்றிருக்கும்
எமது பெரு மதிப்பிற்குரிய

**திரு. வி. என். சிறிகாந்தா**
(உதவி மதுவரி ஆணையாளர்
வடபிராந்தியம் – 01)
அவர்களை
வருக வருக என வரவேற்பதில்
மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றோம்.

**வடபிராந்திய மதுவரி கிரிக்கெட்அணி**
**யாழ். மாவட்டம்**

(கி/44)



ஸ்ரீ செல்வா
யாழ்ப்பாணம்
புதிய வெளியீடு
விஜயகாந் (இரட்டை வேடம்)
பிரபு தேவா, மீனா
நடித்த
வானத்தைப் போல
(CD பிரதி)
(சிறந்த குடும்பச் சித்திரம்)
காட்சிகள்
10. 30, 2. 30 (ப.நே)
(00115)

நாகம்ஸ்
சுன்னாகம்
சரத்குமார்
தேவயாணியின்
**சூரிய வம்சம்**
(ரீல்ஸ்)
11:00-2:30 (பு.நே)
(00116)

### யாழ்.கடற்றொழிலாளர்

# எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றி

# அமைச்சரிடம் எம். பி. முறையீடு!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கடற்றொழிலாளர் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் அவர்களின் அவல வாழ்க்கை தொடர்பான தமிழர் விடுதலைக்கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசாவினால் கடற்றொழில் நீரியல்வளஅமைச்சர் மகிந்த ராஜபக்ஷவின் கவனத்திற்கு கொண்டுவரப் பட்டுள்ளது.

பாஷையூர், குருநகர், கொழும்புத்துறை போன்ற மையங்கள் ஊடாக அனுப்பப்பட்ட அறிக்கைகளில் தெரிவிக்கப்பட்ட விபரங்கள் தொடர்பாக அவர் அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளார்.

மார்கழி மாதம் 11 ஆம் திகதி தொடக்கம் குருநகர், அரியாலை, கொழும்புத்துறை போன்ற பகுதிகளில் உள்ள சுமார் 2 ஆயிரம் மீனவர்கள் வரையில் தற்போதைய பதற்ற நிலையைடுத்து பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

★ யாழ். கடலேரியில் கடற்றொழிலாளர் இறங்குவதற்கு படையினர் தடை விதித்துள்ளமையினால் பலகோடி ரூபா பெறுமதியான வலைகள் அணியங்கள் என்பன சேதமடையக் கூடிய ஆபத்துக் காணப்படுகிறது.

★ இப் பகுதி கடற்றொழிலாளர் கடற்றொழிலை நம்பியே தமது வாழ்க்கையை நடாத்த வேண்டி உள்ளது.

★ படையினரின், இத்தகைய செயற்பாடுகள் 'தொடருமாயின் கடற்றொழிலாளர் பட்டினிச்சாவை எதிர்கொள்ள வேண்டிய சூழ்நிலையை விரைவில் தோற்றுவிக்கும்.

★ எனவே கடற்றொழிலாளரின் ஜீவனோபாய தேவை கருதி பின்வரும் கோரிக்கைகளை தங்களுக்கு சமர்ப்பிப்பதாக மாவை சேனாதிராசா குறிப்பிட்டுள்ளார்.

அவையாவன;

★ வலைகளை அகற்ற உடனடி அனுமதி வழங்கல்.

★ காலை, மாலை வேளைகளில் மீன் பிடிக்க அனுமதி வழங்கல்.

★ நிலைமை வழமைக்குத் திரும்பும்வரை உதவுதொகை வழங்கல்.

★ கடற்றொழிலாளர் சங்கங்கள் யாழ். அரச அதிபருடன் சந்திப்பு நடாத்த ஏற்பாடு செய்து கொடுத்தல்.

என்பன அந்த அறிக்கையில் இடம்பெற்றுள்ளன. (க)

## தொலைபேசியில் அநாமதேய அழைப்பு நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுதல்!

(மட்டக்களப்பு)

மட்டு. மாவட்டத்தில் அநாமதேய தொலைபேசி அழைப்பாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவது குறித்து தொலைபேசி பாவனையாளர்கள் மாவட்ட டெலிகொம் நிறுவன பொறியியலாளரின் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளனர்.

இரவு நேரங்களில் பிரபல மானவர்கள், முக்கிய பிரமுகர்களின் தொலைபேசி இலக்கங்களை அழைத்து தகாத வார்த்தைகளால் ஏசியும், பேசியும் வரும் நடவடிக்கைகள் தொடர்ந்தவண்ணமுள்ளன.

இதனால் இரவுநேரங்களில் வரும் அழைப்புக்களை எடுக்கத்தயங்குவதாக முக்கிய பிரமுகர்கள் தெரிவிக்கின்றனர். பெண்கள் தனியாகவிருக்கும் வீடுகளிலும் இத்தகைய தொலைபேசி அழைப்புக்கள் அதிகம்வருவதாகத் தெரிய வருகிறது.

(கு-60)

## வடமராட்சி தொண்டர்ஆசிரியர்களிற்கு யாழ்ப்பாணம் வலயத்தில் நியமனம்

### சம்பந்தப்பட்டவர்கள் விசனம்

(செம்பியன்பற்று)

வடமராட்சியைச் சேர்ந்த சுமார் இருபது தொண்டர் ஆசிரியர்களிற்கு யாழ்ப்பாணம் வலயத்தில் நியமனம் வழங்கப்பட்டமை குறித்து சம்பந்தப்பட்டவர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

நீண்டதூரம் பயணம்செய்து கல்வி கற்பிக்க வேண்டி உள்ள தாகாவும் பிரயாணச் செலவாக பெருமளவு பணம் செலழிக்க வேண்டியுள்ளதாகவும் சம்பந்தப்பட்டவர்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. (க-42)

## மூதூருக்கான 32 ஆயிரம் பாடநூல்கள் திருமலைக்கு அனுப்பி வைப்பு!

(திருகோணமலை)

திருமலை மூதூர் கல்வி வலயத்துக்கான இலவச பாடநூல்களின் ஒரு தொகுதி அண்மையில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மூதூர் கல்வி வலயத்துக்கான 32 ஆயிரம் பாடநூல்களே நேற்று முன்தினம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இராணுவ கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதிக்கான ஒரு தொகுதி பாட நூல்களை ஏற்றிக் கொண்டு 10 லொறிகள் கொழும்பிலிருந்து புறப்படவுள்ளதாக கல்வியமைச்சு வட்டாரங்களிலிருந்து தெரிய வருகிறது.

இதேவேளை வடக்கு கிழக்கு மாகாணப் பாடசாலைகளுக்கான புதிய பாடத்திட்ட நூல்கள் அனைத்தும் எதிர்வரும் பெப்ரவரி 15ஆம் திகதிக்குள் அனுப்பி வைக்கப்படும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளபோதிலும், இது நடைமுறைக்கு சாத்தியமற்றது என்று தமிழர் ஆசிரியர் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

இது பற்றி அந்த வட்டாரங்களிலிருந்து தெரிய வருவதாவது;

புதிய பாடத்திட்டத்திற்கான சிங்கள நூல்களே இன்னும் அச்சுக்கு ஏற்றப்படவில்லை. தமிழ் நூல்களுக்குரிய பாடங்கள் சிங்கள நூல்களுக்குரியனவற்றிலிருந்தே பெறப்படவுள்ளது. எனவே சிங்கள நூல்கள் பதிப்பித்து முடிந்த பின்னரே தமிழ் நூல்கள் அச்சிடப்படவுள்ளதால் தமிழ் நூல்கள் மேலும் காலதாமதமாகலாம் என்று கூறப்படுகிறது.

(கு-102)

## 9 பிரதேச செயலர் பிரிவுகளில் 96அபி. திட்டங்கள் பூர்த்தி!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 9 பிரதேச செயலகப் பிரிவுகளில் இவ்வாண்டு 96 சமுர்த்தி சமூக அபிவிருத்தித் திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட சமுர்த்தி பிரதி ஆணையாளர் ஆர். நெடுஞ்செழியன் தெரிவித்துள்ளார்.

46 லட்சம் ரூபா செலவில் இத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலதிகமாக மக்கள் பங்களிப்பாக கிடைத்த 10 லட்சத்து எண்ணாயிரத்து ৮70 ரூபா பெறப்பட்டுள்ளதாகவும் எமது நிருபரிடம் தெரிவித்தார்.

இத்திட்டங்கள் அனைத்தும் இம்மாவட்டத்திலுள்ள இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இதேவேளை—

வாகரை, பட்டிப்பளை, வவுணதீவு போன்ற இராணுவ கட்டுப்பாடற்ற பகுதிகளில் இவ்வாண்டு சமுர்த்தித் திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்படும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(கு-60)

### கொழும்புக் கிழங்கு வந்ததனால்

# உருளைக்கிழங்கு விலை விழ்ச்சி பயிர்ச்செய்கையாளர் பாதிப்பு!

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டில் இதுவரை காலமும் ஒருகிலோ நூற்றெண்பது ரூபா முதல் இருநூறு ரூபா வரை விற்கப்பட்டுவந்த உருளைக்கிழங்கு நேற்று முதல் திடீரென 60 ரூபா முதல் 70 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டதைக் காணக்கூடியதாக இருந்தது.

கொழும்பிலிருந்து போதிய கிழங்குகள் வராத காரணத்தினாலும், உள்ளூர் கிழங்குகள் அறுவடை செய்யப்படாததாலும் உயர்ந்த விலையில் இருந்த உருளைக்கிழங்கு நேற்று கொழும்பிலிருந்து கப்பல் மூலம் எடுத்துவரப்பட்டதையடுத்தே இந்த விலை மலிவு ஏற்பட்டுள்ளது.

இதேவேளை—

நேற்று யாழ்ப்பாணத்தில் உள்ளூர்க் கிழங்குகளும் விற்பனைக்கு வந்திருந்தன. உள்ளூர்க் கிழங்கு ஒரு கிலோ 70 ரூபாவாக விற்கப்பட்டு வந்தது. ஆனால் கொழும்பிலிருந்து கிழங்குகள் எடுத்துவரப்பட்டதை அடுத்து உள்ளூர்க் கிழங்குகளை மேலும் குறைந்த விலையிலேயே விற்பனை செய்யவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் இதனால் உருளைக்கிழங்கு செய்கையாளர்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர் என்றும் விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். (கு-7)

## 'கூட்டுறவு - ஆத்மீக; தெய்வீக சக்தி' வவுனியாவில் பிரதம செயலாளர் உரை

'கூட்டுறவு என்பது மிகப் பெரியதானதொரு ஆத்மீக, தெய்வீக சக்தி என்பதனை நாம் உணரவேண்டும். கூட்டுறவு சேவையில் நேர்மை; தியாகம், நியாயம், சமநீதி இருக்க வேண்டும்' இவ்வாறு வடக்கு - கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஜீ. கிருஸ்ணமூர்த்தி தெரிவித்துள்ளார்.

வவுனியா நகரில் நேற்று நடைபெற்ற கூட்டுறவுச் சங்கத்தின் தசாப்த சிறப்பு மலர் வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேற்படி விழா நேற்று மாலை வவுனியா முத்தையா மண்டபத்தில் சங்கத் தலைவர் கே. சிவலிங்கம் தலைமையில் இடம் பெற்றது.

நிகழ்வில் கூட்டுறவு மாகாணச் செயலாளர் கே. பரமலிங்கம் வவுனியா பிரதேச செயலாளர் திருமதி இமல்டா சுகுமார் சித்தானந்த இந்து இளைஞர் சங்க தலைவர் என். சேனாதிராசா மற்றும் தமிழ்மணி அனங்கன், தமிழ்மணி முல்லை ஆகியோர் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

அங்கு உரையாற்றிய வவுனியா பிரதேச செயலாளர் தனது உரையில் 'வவுனியா கூட்டுறவுச் சங்கம் அரச அதிபரினால் செய்யப்பட வேண்டிய 90 வீதமான உணவு விநியோகப்பணிகளை மேற்கொண்டுள்ளது. இது பாரட்டப்பட வேண்டிய விடயமாகும் என்று குறிப்பிட்டார்.

(கு-103)

### பாடசாலை மாணவர்களிடையே

# கண்ணிவெடி விழிப்புணர்வுக்காக யூ. என். டீ. பி. நாடகப் போட்டி

(நெடுந்தீவு)

யாழ். மாவட்டப் பாடசாலை மாணவர்கள் இடையே கண்ணிவெடிகள் தொடர்பான விழிப்புணர்வினை ஏற்படுத்தும் நோக்குடன் ஐ.நா. அபிவிருத்தி திட்ட யாழ். அலுவலகம் நாடகப்போட்டிகளை நடத்தவுள்ளது.

கண்ணிவெடி விழிப்புணர்வு தொடர்பான இந்த நாடகப்போட்டிகள் வலய ரீதியாகவும், மாவட்ட மட்டத்திலும் எதிர்வரும் பெப்ரவரி மாத நடுப்பகுதியில் நடத்தப்படவுள்ள தாகவும், பங்குபற்ற விரும்பும் பாடசாலைகளை இல. 125, கோவில் வீதி, நல்லூர் என்ற முகவரியில் அமைந்துள்ள யூ.என்.டீ.பி/ ஜே.ஆர்.ஆர்பி. அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் திட்ட இணைப்பாளர் கேட்டுள்ளார். (கு-82)

## தினக்குறிப்பு புத்தகம் வழங்கல்

(அச்சுவேலி)

அரசாங்கத்தினால் கிராம சேவையாளர்களுக்கு வழங்கப்படும் தினக்குறிப்புப் புத்தகம் யாழ். செயலகத்தினால் கிராம சேவையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னைய காலங்களில் கிராம சேவையாளர்களுக்கு அரசினால் வழங்கப்படும் தினக்குறிப்புப் புத்தகங்கள் வருட நடுப்பகுதியில் வழங்கப்பட்டு வந்த போதிலும் இந்த ஆண்டு வருட முற்பகுதியிலேயே வழங்கப்பட்டுள்ளது.

(க-14)

## பண்ணாகத்தில் சுகாதார நிலையம் 5லட்சம் ரூபாவில் அமைக்கப்படுகிறது

பண்ணாகத்தில் 5இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுவரும் ஆரம்ப சுகாதார நிலையம் பூர்த்தியடையும் நிலையில் உள்ளது.

ஜீ. ரி. சற்றின் உதவியுடன் அமைக்கப்படும் கட்டட அமைவிடத்திற்கான 3 பரப்புக் காணியை அமரர்களான பரமகுரு, அமிர்தவல்லி (முன்னாள் குடும்ப நல உத்தியோகத்தர்) ஆகியோரின் ஞாபகார்த்தமாக ஸ்ரீ பரமானந்தவல்லி அன்பளிப்பாக வழங்கியுள்ளார் இவ்வாறு காணி அன்பளிப்பாக வழங்கப்பட்டதனால் இதுவரைகாலமும் மாதர் சங்கக் கட்டடத்தில்இயங்கும்ஆரம்ப சுகாதார நிலையம் புதிய கட்டடத்தில் இயங்கும் வாய்ப்புக் கிடைத்துள்ளதென அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (க)

## யாழிலுள்ள பிரதேச சபைகளுக்கு விரைவில் கணனி, பக்ஸ் வசதிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலுள்ள 17 பிரதேச சபைகளுக்கு வெகு விரைவில் கணனி மற்றும் பக்ஸ் வசதிகள் செய்து கொடுக்கப்படவுள்ளதாக வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் சபாபதிப்பிள்ளை தெரிவித்துள்ளார்.

ஊர்காவற்றுறை பிரதேச சபைத்தலைவர் மனோகரன் தமது பிரதேசசபைக்கு கணனி மற்றும் பக்ஸ்வசதிகள் செய்து கொடுக்குமாறு அண்மையில் உள்ளூராட்சி ஆணையாளருக்கு விடுத்த வேண்டுகோளை அடுத்தே யாழ்ப்பாணத்திலுள்ள 17 பிரதேச சபைகளுக்கு இத்தகைய வசதிகள் செய்து கொடுக்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

(கு-14)

# இஸ்ரேல் - சிரியா பேச்சு முறுகல் நிலையில்

# அமெரிக்காவின் சமாதான முயற்சி ஸ்தம்பிதம்!

## இருதரப்புகளிலும் அசிரத்தை

(நியூயோர்க்)

**ஸ்தம்பிதமடைந்திருந்த இஸ்ரேவலுக்கும் சிரியாவுக்குமிடையிலான சமாதானப் பேச்சு வார்த்தைகள் மேலும் சிக்கலடைந்துள்ளதாகத் தெரிய வருகிறது.**

**இரு நாடுகளுக்கும் இடையேயான முறுகல் நிலை காரணமாக அமெரிக்கா மேற்கொண்டுள்ள சமாதான முயற்சிகள் மேலும் ஸ்தம்பிதமடையலாம் என்று எதிர் பார்க்கப்படுகின்றது.**

இஸ்ரவேலுக்கும் சிரியாவுக்கும் இடையிலான சமாதான முயற்சிகள் மேலும் முறுகல் நிலையை அடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஸ்தம்பித்த நிலையில் இருக்கும் இஸ்ரவேல்-சிரிய பேச்சுக்களை முன்னெடுப்பதற்கான அமெரிக்காவின் முயற்சிகள் மேலும் சிக்கலடைந்துள்ளன. இரு தரப்பும் இந்த விடயத்தில் அசிரத்தை காட்டி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் குறித்த நிகழ்ச்சிநிரலைத் தயாரிக்கும் போது இஸ்ரவேலும், சிரியாவும் தமது அதிகாரிகள் எவரையும் அனுப்பி வைக்கவில்லை என்று கூறப்படுகிறது.

கடந்த வருட இறுதியில் ஆரம்பிக்கப்பட்ட இஸ்ரவேல்-சிரியப் பேச்சுவார்த்தைகள் சிக்கலடைந்துள்ளன. என்பதை இரு நாடுகளின் பிரதிநிதிகளும் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

சிரிய தரப்பிலிருந்து அதிகாரிகள் நியூயோர்க்குக்கு வராததால் தான் இஸ்ரவேல் அதிகாரிகளும் வரவில்லை என்று இஸ்ரவேலிய அரசியல் வட்டாரங்களும்— இஸ்ரவேல் 1967 இல் கைப்பற்றிய கோலான் குன்றுகளை விட்டு வாபஸ் பெறாத வரை சிரியாவிலிருந்து அமெரிக்காவுக்கு அதிகாரிகளை அனுப்பி வைக்கப் போவதில்லை என்று சிரிய அதிகாரிகள் தெரிவித்ததாக ஏ. எப். பி. செய்தித்தாபனம் செய்தி வெளியிட்டுள்ளது.

(கு)

## சீனாவின் புதிய செய்மதி வெற்றிகரமாக விண்ணில் வலம்

சீனாவின் 'லோங் மார்ச் 3 ஏ' விண்கலத்திலிருந்து ஸொங்சிங் - 22' என்ற தொலைத்தொடர்பு செய்மதி வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்டுள்ளது.

இந்த செய்மதி தரைத் தொலைத் தொடர்புகளுக்குப் பயன்படத்தக்க வகையில், 8 ஆண்டுகள் சேவையை வழங்குவதற்கு உகந்ததாகத் தயாரிக்கப்பட்டிருந்தது.

கடந்த 25 ஆம் திகதி புதன்கிழமை அதிகாலை சிசுவான் தென்மேற்கு மாகாணத்திலுள்ள 'சிசங்' செய்மதிப்புறப்பாட்டு நிலையத்திலிருந்து புறப்பட்ட ரொக்கட் வெடித்ததும் 'ஸொங் சிங் - 22' வான வீதியில் வலம் வந்ததாகக் கூறப்படுகிறது.

1996 ஒக்டோபரில் ஆரம்பிக்கப்பட்ட லோஸ் மார்ச் விண்கலத்தின் 18ஆவது செய்மதியும், 1994 இல் கன்னிப் பயணத்தை ஆரம்பித்த 'லோங்மார்ச் - 3 ஏ' என்ற ரொக்கட்டின் நான்காவது செய்மதி இது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

(கு-5)

## விமான விபத்தில் நால்வர் பலி

(அங்காரா)

அங்காராவிலிருந்து இஸ்தான் புல்லுக்குச் சென்ற விமான மொன்று காடுல் ..னும் நகருக்கு அண்மையில் வெடித்துச் சிதறியுள்ளது.

விமானம் வெடித்துச் சிதறிய போது விமானத்தில் பயணம் செய்த விமானப் படை உயரதிகாரி இர்பான் இல்டிரான் உட்பட நான்கு பேர் இந்த விபத்தில் கொல்லப்பட்டுள்ளனர். (கு)

## ஜம்முவில் குண்டு வெடிப்பு

(புதுடில்லி)

இந்தியாவின் குடியரசு தினத்தன்று குடியரசுத்தின வைபவங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தவேளை ஜம்மு கஷ்மீரிலுள்ள ஜம்மு நகரத்தில் 4 குண்டுவெடிப்புச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன. (கு)

பிரிட்டனில் உள்ள

# தன்னினச் சேர்க்கையாளர்களின்

# அமெரிக்கக் குழந்தைகள் லண்டனில்

### - தற்காலிக அனுமதி வழங்கப்பட்டது -

(பிரிட்டன்)

அமெரிக்காவிலுள்ள வாடகைத் தாய் ஒருவர் மூலம் பிரிட்டனைச் சேர்ந்த தன்னினச் சேர்கையாளர்கள் இருவருக்குப் பிறந்த 6 வாரகால இரட்டைச் சிசுக்களை தமது பெற்றோருடன் வாழ பிரிட்டிஷ் அரசாங்கம் அனுமதியளித்துள்ளது.

கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் பிறந்த ஆணும், பெண்ணுமான இந்த இரட்டைப்பிள்ளைகளின் தன்னினச் சேர்க்கைப் பெற்றோர்களான ரோனி பஸ்லோ (35) பஸ்ரீட் ரெவிற் (30) ஆகியோருடன் குழந்தைகள் லண்டனுக்கு எடுத்துவரப்பட்டுள்ளன. குழந்தைள் அமெரிகாவில் பிறந்தன என்பதனால் லண்டனில் தற்காலிக வதிவிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தன்னினச் சேர்கையாளர்களான இந்த இரு ஆண்களும் தமது பெயரை 'மிஸ்டர் அன்ட் மிஸ்டர்' ட்ரெவிற் பஸ்லோ என்று மாற்றியுள்ளனர்.

ஆனாலும்—

பிரிட்டிஷ் சட்டத்தில் இவ்வாறு இல்லை என்பதால் ட்ரெவிற்- பஸ்லோவை சட்டபூர்வ பெற்றோர்களாக பிரிட்டிஷ் ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

தமக்கு பிள்ளைகள் தேவை என்பதற்காக வாடகைத் தாய் மூலம் பிள்ளைகளைப் பெறுவதற்கு ட்ரெவிற்-பஸ்லோ சோடி இரண்டு லட்சம் பவுண்களைச் செலவழித்துள்ளது.

இந்த இருவரினதும் பெயர்களும் பிறப்புச் சான்றிதழ்களில் பெற்றோர் I, பெற்றோர் II, என்று குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், இரட்டை குழந்தைகளுக்கு அஸ்பென், சப்ரன் என்று பெயரிடப்பட்டுள்ளதாகவும் செய்தித்தாபனம் ஒன்று செய்திவெளியிட்டுள்ளது. (கு)

## அரசியல் தஞ்சம் கோருபவர்களுள் இலங்கையர் இரண்டாவது இடத்தில்!

### 'பீற்றர் ஹில்மன் தெரிவிப்பு'

(லண்டன்)

பிரிட்டனில் அரசியல் புகலிடம் கோரியவர்களில் இலங்கையர்கள் இரண்டாவது இடத்தை வகிப்பதாக பீட்டர் ஹில்மன் என்பவர் தெரிவித்துள்ளார்.

பிரிட்டனில் அரசியல் புகலிடம் கேட்பவர்களில் யுகோஸ்லாவிய நாட்டவர்கள் முதலிடத்தையும், இலங்கையர் இரண்டாம் இடத்தையும், சீனர் மூன்றாவது இடத்தையும் பிடித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை-

ஐரோப்பிய நாடுகளில் ஜேர்மனிக்கே கடந்த வருடம் அதிகமானவர்கள் அரசியல் புகலிடம் கோரிச் சென்றுள்ளதாகவும் அந்த வகையில் பிரிட்டன் இரண்டாவது இடத்தை வகிக்கிறது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(கு-5)

இந்திய விமானக்கடத்தல்

# பாகிஸ்தான் அரசுதான் காரணம் என்பதற்கு ஆதாரம் எதுவுமில்லை

### அமெ.ஜனாதிபதி பில். கிளிங்டன்

(வோஷிங்டன்)

'இந்தியன் எயார் லைன்ஸ்' விமானக் கடத்தலுக்கும் பாகிஸ்தான் அரசுக்கும் இடையே தொடர்பு இருப்பதாக கூறப்பட்டுவரும் குற்றச்சாட்டினை உறுதிப்படுத்த, எவ்வித ஆதாரமும் இல்லை. என்று அமெரிக்க ஜனாதிபதி பில் கிளிங்டன் தெரிவித்துள்ளார்.

வெள்ளை மாளிகையில் நடந்த செய்தியாளர்மாநாட்டில் இக்கருத்தை வெளியிட்டுள்ள அமெரிக்க அதிபர் மேலும் தெரிவிக்கையில்;

விமானக்கடத்தலை பாகிஸ்தான் முன்கூட்டியே அறிந்து அதற்கு ஆதரவும் உதவிகளும் வழங்கியதற்கான அத்தாட்சிகள் எவையும் எம்மிடம் இல்லை என்று அழுத்தம் திருத்தமாக கூறினார்.

பாகிஸ்தான் நாடு விமானக் கடத்தலுடன் சம்பந்தப்படவில்லைஎன்றும்அமெரிக்க அதிபரின் கூற்று அமெரிக்காவின் பாகிஸ்தான் ஆதரவு நிலைப்பாட்டை தெளிவாய் எடுத்துக்காட்டி இருப்பதாக அரசியல் நோக்கர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை —

பாகிஸ்தான் அரசின் உதவியுட இயங்கும் ஒரு தீவிரவாத அமைப்பே இந்தியன் எயார் லைன்ஸ் விமானத்தைக் கடத்தியதாக அமெரிக்க இராஜாங்க அமைச்சு முன்பு செய்தி வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (கு-9)

செச்சினியாவில்

## குரொஷ்னி மோதல்களின் மத்தியில் ஆப்கானிஸ்தானில் தூதரகம் திறப்பு

(காபூல்)

செச்சினியத் தூதரகம் ஒன்று அண்மையில் ஆப்கானிஸ் தானில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானின் காபூல் நகரிலுள்ள மத்திய புளொவர் வீதியில் ஆப்கானிஸ்தானுக்கான செச்சினியத் தூதரகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வின் போது பச்சை, வெள்ளை, கறுப்பு நிறங்களும், ஆறு நட்சத்திரங்களும், ஒரு ஓநாயும் அடங்கிய கொடி ஒன்றும் ஏற்றிவைக்கப்பட்டுள்ளது.

செச்சினியாவின் தலைநகர் குரொஷ்னியின் மீது ரஷ்யப் படைகள் கடுமையான தாக்குதல்களை நடத்திய வேளையில் இந்த தூதரகம் திறந்து வைக்கப்பட்டிருப்பது ஆப்கானிஸ்தானுக்கும் செச்சினி

### உலகவலம்

யாவுக்குமிடையிலான இருதரப்பு உறவுகளையும் மேம்படுத்தும் நிகழ்வு என அவதானிகள் கூறுகின்றனர்.

இதே வேளை-

செச்செனியாவும், தலிபானும் இஸ்லாமிய இராச்சியமொன்றை உருவாக்கிவிட வேண்டும் என்ற நோக்கத்துடன் போராடி வருகின்றன.

செச்சினியாவை அங்கீகரிக்கும் முதல் நாடு ஆப்கானிஸ்தானே என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

(கு)

பாரிஸில்

## பயங்கரவாதத் தம்பதியர்; கணவனும் மனைவியும் கைதாகினர்!

(பாரிஸ்)

இரண்டு குண்டு வெடிப்புச் சம்பவங்களுக்காக இருபது வருடங்களாக தேடப்பட்டு வந்த ஜெர்மனியத் தம்பதிகளைப் பிரான்ஸ் பொலிசார் கைது செய்துள்ளனர்.

1970, 78 காலப்பகுதியில் பிரான்ஸில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவங்களுக்குக் காரணமானவர்கள் எனக்கருதப்பட்ட இவர்கள் இவ்வளவு காலமும் தேடப்பட்டு இப்போது கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட இந்த தம்பதியர் ஜேர்மனியைச் சேர்ந்தவர்கள் என்றும் —

இவர்கள் சுவிஸ் நாட்டவர்கள் எனக் காட்டும் போலி ஆவணங்களுடன் பிரான்ஸின் லில்லியில் உள்ள சிறிய வீடொன்றில் தங்கிஇருந்தனர் என்றும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

68வயதுப்பெண்ணின்பிறந்த தினத்தைக் கொண்டாடுவதற்காக இவர்கள், இரண்டு லட்சத்து ஐம்பதினாயிரம் பிராங் பணத்துடன் பரிஸ் ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்தசமயம் பொலிசாரினால் கைது செய்யப்பட்டதாக கூறப்படுகின்றது.

1970 இல் ஸ்தாபிக்கப்பட்ட 'புரட்சிக்குழு' என்னும் அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்றும் சந்தேகிக்கப்படும் இவர்கள் குண்டுவெடிப்பு, திவைப்பு போன்ற குற்றங்களுக்கு பொலிசாரால் தேடப்பட்டுவந்தனர். (கு-5)

## டொப்-எம்.1 விமான எதிர்ப்பு ஏவுகணைகள் ரஷ்யாவிடமிருந்து கிரேக்கத்திற்கு

(மொஸ்கோ)

ரஷ்யாவின் 'டொப்-எம்.1' என்ற நவீன விமான எதிர்ப்பு ஏவுகணைகளை ரஷ்யா கிரேக்க நாட்டுக்கு வழங்கவுள்ளது.

இரு நாடுகளும் தமக்கிடையே கைச்சாத்திட்டுள்ள 525 மில்லியன் டொலர் வியாபார ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே இந்த ஏவுகணைகள் கிரேக்கத்துக்கு வழங்கப் படவுள்ளது.

இன்னும் சில மாதங்களில் இந்த ஏவுகணைகள் கிரேக்கத்துக்குக் கிடைக்கும் என்று ரஷ்ய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (கு)

அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார் என்னுடை ரேனும் இலர்.
- குறள்

# வலம்புரி

## ஞானமும் கல்வியும்

கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்றனர் ஆன்றோர் இன்னல் சூழ்ந்த வேளை இறைவனை நாடல் சகஜம். துன்பம் போக்குதல் மட்டுமன்றி கலைமையமாகவும், அறிவியல்சுரங்கமாகவும், ஞான வெள்ளத்தின் நிறைவிடமாகவும் ஆலயங்கள் அமைந்தன அன்று. அவற்றை உணர்ந்த எழுச்சி நிலையொன்று இன்று மலரத் தொடங்கியிருக்கிறது.

கொக்குவில் தலையாழியில் ஒரு அறநெறிப் பாடசாலை. ஞானவைரவர் அருட்பார்வையில் மலர்ந்தது. பரிசளிப்பு வைபவத்திற்கு நல்லூர் பிரதேச செயலர் செந்தில் நந்தனன் பிரதம அதிதி. அந்த முதுமை பெற்ற இளைஞரின் சமய பக்தியும் அடக்கமும், இறை நகர் பணிவும், மக்கள் மய எளிமையும் உள்ளத்தை ஈர்த்தன. இத்தகையோர் நிர்வாகக் கதிரைகளை அலங்கரித்தல் இறைவன் கொடையெனலாம்.

எல்லாவற்றிற்கும் மேலாக அறநெறிப்பள்ளியின் முதல்வர் திருவாட்டி சண்முகதாஸ் பாராட்டப்பட வேண்டியவர். நுண்மதிப் பெண்மை துலங்க துடிப்பாக வளரும் மொட்டுக்களாய சிறார்களை அணைந்து அணைக்கின்ற பக்குவம் போற்றுதற்குரியது. அன்னாரின் ஆசிரிய குழாத்தின் ஒத்துழைப்பும் ஊரவரின் உந்துசக்தியும் அறநெறி தழைக்க வகை செய்வது பாராட்டுக்குரியதே.

இருதசாப்தத்திற்கு மேலாக மண்ணின் அவலமும், மறச் செயல்களும் அறச்செயலை விழுங்கியதால் விளைந்தவையே. தானங்களிற் சிறந்த நிதானத்தை இழந்தால் நிம்மதி குலையும். நிஜ வாழ்வு தளம்பும். துயர் த்ளுவும். ஊழ்வினையோவென உள்ளம்வேகும். முற்றுகல் செய்வது விளைவது பிற்பகலிற்தானே.

அந்தச் சூழலைஎண்ணி ந்றித்த பரிசளிப்பு விழாவினைப் பார்க்கின்றபோது ஒரு திருப்புமுனையில் வந்து நிற்கிறோம் என்ற நிம்மதிப் பெருமூச்சு தோன்றுகிறது. தொண்ணூறிற்கு மேற்பட்ட வளரும் மொட்டுக்கள் தங்கப்பதங்கங்களுடன் தங்கமாக விளையவிழைந்தமை மகிழ்ச்சி தருவதாகும். ஆயகலைகள் அறுபத்து நான்கும் வளர்க.

- அன்புடன் ஆசிரியர்

அரசு தனது பாஸ் நடைமுறையின் மூலம்

# வடக்கு - கிழக்கை இருகூறாக்கி தனிநாடாக ஏற்றுக்கொண்டுள்ளது!

## ஜோசப் எம். பி. குற்றச்சாட்டு

(மட்டக்களப்பு)

''மட்டக்களப்பு மாவட்டத்தை சேர்ந்தோர் நாட்டின் ஏனைய பகுதிகளுக்குச் செல்வதற்கு புதிய பாஸ் முறையை அமுல் செய்வதன் மூலம் வட-கிழக்கு மக்களை நாட்டின் ஏனைய மக்களிடம் இருந்து அன்னியப்படுத்துவதுடன் வட-கிழக்கு மாகாணத்தை ஒரு தனி நாடாக தாங்களே வலிந்து துண்டு போடும் நிலைப்பாட்டிற்கு வந்துள்ளதாகவே என்னால் உணர முடிகின்றது'' என்று மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பாராளு மன்ற குழுத் தலைவருமான ஜோசப் பரராசசிங்கம் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கவுக்கு எழுதியுள்ள கடிதத்தில் குற்றம் சாட்டியுள்ளார்.

வவுனியா மாவட்டத்தைப் போன்று மட்டக்களப்பு மாவட்டத்திலும் போக்குவரத்திற்கான பாஸ்முறையை அமுல் படுத்த பாதுகாப்பு அமைச்சு முன்வந்துள்ளதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஜனாதிபதி அவர்களுக்கு ஜோசப் பரராசசிங்கம் எழுதியுள்ள கடிதத்திலேயே இப்படி தெரிவித்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும்—

மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்தோர் நாட்டின் ஏனைய பகுதிகளுக்கு செல்வதற்கு பாதுகாப்பு அமைச்சு அறிமுகம் செய்ய உள்ள புதிய பாஸ் முறை சம்பந்தமான செய்தி கேட்டு மட்டக்களப்பு மாவட்ட மக்களும் அவர்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளும் ஆழ்ந்த அதிர்ச்சியும், ஆச்சரியமும் அடைந்துள்ளனர்.

ஏற்கனவே பாதுகாப்பு என்ற போர்வையில் இம் மாவட்டத்தில் இருந்து நாட்டின் ஏனைய பகுதிகளுக்குச் செல்லும் பொதுமக்கள் பாதுகாப்புச் சாவடிகளில் பெரும் சோதனைகளுக்கும், இம்சைகளுக்கும் உள்ளாகி வருகின்றனர்.

வவுனியா மாவட்டத்தில் இது போன்ற பாஸ் கெடுபிடிகள் காரணமாக அப்பாவி மக்கள் பெரும் தொல்லைகளுக்கு ஆளாகி வருகின்றனர் என்பது தெரிந்ததே

மக்கள் எதிர்நோக்கும் அவசரச் சிகிச்சைத் தேவைகள் மற்றும் அவசரத் தேவைகள் இது போன்ற பாதுகாப்பு நடவடிக்கைகளினால் முடங்கப்பட்டுள்ளது..

இது போன்ற அல்லது இவற்றை விட மிகவும் மோசமான பாதுகாப்பு நடவடிக்கைகளின் மூலம் மட்டக்களப்பு மாவட்ட மக்களின் வாழ்க்கை மிகவும் மோசமாக பாதிக்கப்படுவதுடன் அவர்களுடைய நடமாட்டம் ஸ்தம்பிதம் அடையும் நிலையும் ஏற்படலாம்.

நோர்வே அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் ''டேபா'' அபிவிருத்தி திட்டங்களை மீட்கப்படாத பகுதிகளில் அமுல் செய்வதற்கு பாதுகாப்பு அமைச்சு தடைவிதித்துள்ளது. இதற்கு சிகரம் வைப்பது போன்று புதிய பாஸ் நடவடிக்கையிலும் பாரபட்சம் காட்டப்பட்டுள்ளது. இராணுவத்தால் மீட்கப்பட்ட பகுதிக்கு ஒரு விதமான படிவங்களும் மீட்கப்படாத பகுதிகளுக்கு வேறு விதமான படிவங்களும் வழங்கப்படவுள்ளன.

இதன் மூலம் ஒரு மாவட்டத்தில் வாழும் மக்கள் மத்தியிலேயே வேறுபாட்டை தங்கள் அரசு ஏற்படுத்தியுள்ளது.

இப்புதிய நடைமுறை தென் ஆபிரிக்க நாட்டிற்கே அபகீர்த்தி ஏற்படுத்திய அந்நாட்டில் அமுல் செய்யப்பட்ட அடக்குமுறை திட்டங்களைப் போன்றே அமைவதுடன் இப்பாஸ் வழங்கும் அதிகாரம் ஒரு சிலர் கையில் மட்டுமே தங்கியுள்ளதால் இச்செயல் அதிகாரத் துஷ்பிரயோகம், லஞ்ச ஊழல் போன்றவற்றுக்கும் வழிவகுக்கலாம்.

இத்திட்டம் மக்கள் மத்தியில் பாகுபாட்டை ஏற்படுத்தும், அதே வேளை வட-கிழக்கு மக்களை நாட்டின் ஏனைய பகுதி மக்களிடம் இருந்து அந்நியப்படுத்துவதுடன் இச்செயலின் மூலம் தாங்களும் தங்கள் அரசும் வலிந்து வட-கிழக்கை ஒரு தனிநாடாக ஏற்றுக் கொண்டுள்ளீர்கள் என்றே நான் கருதுகின்றேன் என்றும்—

நாட்டின் தலைவி என்ற முறையிலும் அரசாங்கத்தின் தலைவி என்ற முறையிலும் இவ்விடயத்தில் உடனடியாக தலையிட்டு புதிய பாஸ் முறையை வாபஸ் பெற வேண்டும், என்றும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (கு-60)

### வவுனியா

## பிரதம தபாலகக் குண்டுவெடிப்புக்கு சர்வதேச மன்னிப்புச்சபை கண்டனம்

(கொழும்பு)

வவுனியா பிரதம தபாலகத்தில் கடந்த வியாழக்கிழமை இடம் பெற்ற குண்டு வெடிப்பிற்கு சர்வதேச மன்னிப்புச்சபை தனது வன்மையான கண்டனத்தைத் தெரிவித்துள்ளது.

லண்டனைத் தலைமையாகக் கொண்டு செயற்படும் இச்சபையானது குண்டு வெடிப்பு தொடர்பாக மேலும் தெரிவிக்கையில் இக்குண்டுத் தாக்குதலை நடாத்துவதற்கு தபாலகத்தைத் தெரிவு செய்த செயல் மிக மோசமானது.

என்றும் பொதுமக்களும் இச்சம்பவத்தில் கொல்லப்பட்டமையானது பொதுமக்களின் உயிரிழப்பை பற்றி இக்குண்டு வெடிப்பின் சூத்திரதாரிகள் எள்ளளவும்கவலைப் படவில்லை என்பதனையே இச்சம்பவம் காட்டுகின்றது என்றும் தெரிவித்துள்ளது.

## தொண்டர் பயிலுநர் ஆசிரியர்கள் டக்ளஸ் தேவானந்தாவுக்கு மகஜர்

(யாழ்ப்பாணம்)

92ம் ஆண்டில் தொண்டர் பயிலுநர் ஆசிரியர்களாக நியமனம் பெற்றும் இதுவரை ஆசிரியர் சேவையில் உள்வாங்கப்படாத ஆசிரியர்கள் தமது நிலை குறித்து யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தாவுக்கு மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

அறுபது ஆசிரியர்கள் கையெழுத்திட்டு அனுப்பிய இம் மகஜர் நேற்று ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட அமைப்பாளர் திரு.நிசாந்தனிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

(ந)

### யூ.என்.எச்.சி.ஆர்

## யாழ்ப்பாண புனரமைப்புப் பணிகளுக்கு ஆறு கோடி ரூபா ஒதுக்கியுள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தின் அபிவிருத்தித் திட்ட வேலைகளுக்கு இவ்வாண்டு ஆறு கோடி ரூபாவை அகதிகளுக்கான ஐ.நா தூதுவராலயம் செலவிட உத்தேசித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.நா. தூதுவராலய யாழ்ப்பாண வதிவிட அலுவலகத்தில் இடம் பெற்ற திணைக்களத் தலைவர் மகாநாட்டில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டது.

கடந்தாண்டு அபிவிருத்தித் திட்ட வேலைகளுக்கு 3 கோடி ரூபா செலவிடப்பட்ட அதேவேளை செலவிட பணம் நல்ல முறைகளில் செலவிடப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. சுமார் அறுபதுக்கும் அதிகமான அபிவிருத்தி மேற்கொள்ளப்பட்டிருந்தன.

புத்தாயிரமாம் ஆண்டின் போது இடம்பெற்ற முதலாவது சந்திப்பில் சகல திணைக்களத் தலைவர்களும் தங்கள் திணைக்களத் தேவை குறித்த மதிப்பீட்டு அறிக்கையை சமர்ப்பித்திருந்தனர். (கு-ந)

## மட்டு. ஆலயக் கொள்ளையருக்கு ஆறுமாத கடூழியச் சிறைத்தண்டனை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மஞ்சந்தொடுவாயிலுள்ள இந்து ஆலயத்தை உடைத்து கொள்ளையிட முனைந்த குமாரவேல் பாக்கியநாதன் என்ற நபருக்கு மட்டக்களப்பு மாவட்ட மேலதிக நீதிபதி திரு. தட்சணாமூர்த்தி 6 மாத கால சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

இம்மாத ஆரம்பத்தில் மேற்படி கோவிலின் 5 கதவுகளை உடைத்து உள் நுழைந்த மேற்படி நபரை பொலிசார் மடக்கிப் பிடித்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்திருந்தனர். (கு-60)

## இன்று கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

நலிவுறும் எமது சமூக அமைப்பில் ''இளையோரின் தலைமை'' எனும் தலைப்பிலான கருத்தரங்கு இன்று மாலை 4-30 மணியளவில் யாழ்ப்பாணம் திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் யாழ். பல்கலைக்கழக வணிகத்துறை விரிவுரையாளர் க. சிவராஜா கலந்து கொண்டு கருத்துக்களை வழங்கவுள்ளார்.

(கு-9)

## இலவச மருத்துவ சேவை

(இளவாலை)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். கிளை வாரத்தில் ஒரு நாள் செம்பியன் பற்றுப் பகுதியில் இலவச மருத்துவ சேவை ஒன்றை வழங்கி வருகின்றது.

இதன் மூலம் இப்பகுதியில் பரவும் தொற்று நோய்களுக்கும் வேறு சிறிய நோய்களுக்குமான மருத்துவ உதவிகளும் தொற்று நோய் பரவலைத் தடுப்பது சம்பந்தமான ஆலோசனைகளும் வழங்கப்பட்டு வருகின்றது.

இதேவேளை—

வெளியிடங்களுக்குச் சென்று மருத்துவமனைகளில் சிகிச்சை பெறுவதற்கான போக்குவரத்து வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது.

(கு-12)

## வீதி சேதம் மக்கள் அவதி

(தென்மராட்சி)

சரசாலை கனகம்புளியடிச் சந்தியில் இருந்து வேம்பிராய் சந்திக்குச்செல்லும் பிரதான வீதி நீண்டகாலமாகத் திருத்தப்படாமல் இருப்பதனால் குன்றும் குழியுமாகக் காணப்படுவதாக அப்பாதையால் போக்குவரத்துச் செய்யும் பொதுமக்களால் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

(கு-77)

★ ★ ★

(இணுவில்)

இணுவில் ஆஸ்பத்திரிக்கு முன்பாக உடுவில் மகளிர் கல்லூரிக்குச் செல்லும் வீதி கடந்த பல வருடகாலமாக திருத்தப்படாமல் குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றது.

இதனால் பாடசாலைக்குச் செல்லும் மாணவர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள், மற்றும் விவசாயிகள் போன்றோர்கள் பல சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

(கு-49)

## வைத்தியர் இடமாற்றம்

(தீவகம்)

வேலணை பிரதேசசபை புங்குடுதீவு உப அலுவலக சித்த ஆயுள்வேத வைத்திய சாலையில் கடமையாற்றி வந்த வைத்திய அதிகாரி பொன். சண்முகரத்தினம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இவரது இடத்திற்கு வைத்திய கலாநிதி து. சண்முகராசா நியமிக்கப்பட்டுள்ளார். (கு-5)

## அணி முகாமையாளராக சுனில்கமுவ

அடுத்தமாதம் 6ம் திகதி பாகிஸ்தானுக்கு சுற்றுப் பயணத்தை மேற்கொள்ளவுள்ள இலங்கைத் தேசிய கிரிக்கெட் அணியின் முகாமையாளராக ரீ.வீ. சுனில்கமுவ நியமிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(கு-7)

குண்டு வெடிப்பில் சேதமடைந்த

# வவு.தபாலகத்தின்பிறிதொருபகுதியில் இன்று மட்டுப்படுத்தப்பட்ட சேவை

(வவுனியா)

குண்டு வெடிப்பினால் சேதமடைந்த வவுனியாப் பிரதம தபாலகத்தின் வேறு ஒரு பகுதியில் பொதுமக்களுக்கான மட்டுப்படுத்தப்பட்ட சேவையை இன்று திங்கட்கிழமை முதல் வழங்கவிருப்பதாக வவுனியா அரச அதி... டே. ேச் தெரிவித்தார்.

நேற்று பிற்பகல் இந்தத் தபாலகத்தை பார்வையிட பிரதம தபால் திணைக்களத்தைச் சேர்ந்த 3 அதிகாரிகள் கட்டட திணைக்கள பொறியியலாளர்கள, வவுனியா பிரதம தபாலதிபர் மற்றும் அரச அதிபர் ஆகியோரே இவ்வாறு மட்டுப் படுத்தப்பட்ட சேவையை அதே கட்டடத்தில் வழங்குவதற்கும் உடனடியாக உத்தரவிட்டுள்ளனர். அதேநேரம் சேதமடைந்த தபாலகத்தின் பகுதிகளைத் திருத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது,

(வ. 103)

## முதலியார்குளம் சுற்றிவளைப்பு

செட்டிகுளம் பிரிவில் உள்ள முதலியார் குளம் பகுதி நேற்றுப் பொலிஸாரினால் திடீரென சுற்றிவளைக்கப்பட்டுத் தேடுதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத்தேடுதலின்போது அப்பகுதி மக்கள் அங்குள்ள மைதானம் ஒன்றிற்கு அழைத்துச் செல்லப்பட்டுத் தீவிர விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டபோதிலும் எவரும் கைது செய்யப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

(வ-103)

## யாழ்.பஸ் நிலைய சட்ட விரோதக்கடைகள் அகற்ற சட்டநடவடிக்கை எடுக்கவேண்டும்

யாழ்.பஸ் நிலையத்தில் அமைந்துள்ள சட்டவிரோத கடைகள் அகற்றப்படாமையால் மத்திய பஸ்நிலையக் கட்டட வேலைகளை ஆரம்பிக்க முடியாதுள்ளது. என தெரிவிக்கப்படுகிறது.

இக்கட்டடத்திற்கு சுமார் 25 இலட்சம் ரூபாவை வட பிராந்திய போக்கு வரத்துச்சபை ஏற்கனவே ஒதுக்கியுள்ளது. இதேவேளை சட்ட விரோத கடைகளை அகற்றுவதற்கு யாழ். மாநகர சபையும், வட பிராந்திய போக்குவரத்துச் சபையும் சட்ட நடவடிக்கை எடுக்க விருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## பெற்றாவில் தனியார்பஸ் தீப்பிடித்தது

(கொழும்பு)

பெற்றா பஸ் நிலையத்தில் தரித்து நின்ற தனியாருக்கு சொந்தமான பஸ்வண்டி ஒன்று நேற்றுக் காலை 5-45 மணிக்கு தீப்பிடித்து எரிந்து முற்றாகச் சேதமடைந்துள்ளது, இத் தீவிபத்திற்கான காரணம் என்னவென்று தெரியவரவில்லை பொலிசாரால் புலன் விசாரனை மேற்கொள்ளப்பட்டுவருகின்றது.

## மாணவர்...

டிருந்ததாவது,

கடந்த 25ஆம் திகதி செவ்வாய்க்கிழமை உரும்பிராய் சந்திரோதயா வித்தியாலய தரம் 8 மாணவன் எஸ். வினோத் பாடசாலையில் வைத்து அதிபருக்கு முறையான அறிவித்தல் எதுவுமின்றி, கைது செய்யப்பட்டமையும், அன்று மாலை அந்த மாணவனின் சகோதரியான யா/வசாவிளான் மத்திய மகாவித்தியால்ய மாணவி செல்வி எஸ். பிரியா வீட்டில் வைத்துக் கைது செய்யப்பட்டமையும், இந்தக் கைதுகள் உத்தியோகபூர்வ அறிவித்தல் எதுவுமில்லாததனால் மாணவர்கள், பெற்றோர்கள் மத்தியில் ஒரு பய உணர்வை ஏற்படுத்தியுள்ளது. இது மிகவும் கண்டிக்கத்தக்கதாகும் என்றும்.

நீண்டகால யுத்தச்சூழ்நிலை யாழ். மாணவரின் கல்வியில் பெரியளவான தாக்கத்தை ஏற்படுத்தி, அந்த இடைவெளியை நீக்க யாழ்ப்பாணக் கல்விச் சமூகத்தால் எடுக்கப்படும் 'பகீரதமுயற்சி' இந்தக் கைது நடவடிக்கையினால் நாசம் செய்யப்படும் என்ற அச்சம் அதிபர்கள், ஆசிரியர்கள், மற்றும் பெற்றோர்கள், மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

இந்நிலைமைகள் தொடர்ந்து ஏற்படாதவகையில் மேற்படி மாணவர்களை உடன் விடுதலை செய்யுமாறு சம்பந்தப்பட்டவர்களிடம் வேண்டுகின்றோம். என்றும்.

இனிமேல் பாடசாலைகளில் மாணவர்கள் கைது செய்யப்படுதல் முற்றாக நிறுத்தப்பட வேண்டும். வெவ்வேறு சந்தர்ப்பங்களில் கைது செய்ய நேர்ந்தால் அந்த கைது குறித்து கல்லூரி அதிபருக்கும், பெற்றோருக்கும் தெரியப்படுத்தப்படுவதோடு அந்தமாணவர்கள் உடனடியாக சட்டத்தின் முன் கொண்டுவரப்படவேண்டும்.

மாணவர்கள் உடல், உளரீதியாக பாதிப்படையக் கூடிய விசாரணைகளுக்கு உட்படுத்தக்கூடாது, உரிய நீதிகள் வழங்கப்பட வேண்டும் என்றும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(கு-வ)

## இளைஞர். . .

சியைச் சேர்ந்த கந்தையா ஜெயமோகன் என்ற 27வயது இளைஞனே கைது செய்யப்பட்டவராவர்.

இவர் மீதான விசாரணைகள் நடைபெற்று வருகின்றன

(கு-52)

## உடனடி. . . .

போராட்டம் முடிவுக்குக் கொண்டுவரப்படாது விடின் அது பல்கலைக்கழக மாணவர்களிடையேயும்; மற்றும் சமூக அமைப்புக்களுக்கும் பரவும் நிலை உள்ளதாக அறிய முடிகின்றது. அவ்வாறு அது சமூகத்தில் ஏனைய நிலைகளுக்கு மாறுமானால் அது அரசிற்கும் பெரும் தலையிடியாகவே அமையும். மாணவர்கள் மீது மேற்கொள்ளப்படும், இத்தகைய நடவடிக்கைகளினால் மாணவர்கள் மாற்று வழிக்குச்செல்லக் கூடிய - புலிகளுடன் இணையும் நிலையேற்படலாம் என்றும்.

குடாநாடு ஓரளவு இயல்பு நிலைக்குத் திரும்பிய பின் இந்த சம்பவம் குடாநாட்டு மக்களிடையே மிகுந்த பீதியை ஏற்படுத்தியுள்ளது என்றும் பாதுகாப்பு அமைச்சுக்கும், இராணுவ உயர்அதிகாரிகளுக்கும்வி. கே, ஜெகன் தெரியப்படுத்தியுள்ளார்.

(கு-வ)

## செட்டிகுளம். . . .

ஆபத்தான நிலையில் அனுராதபுரம் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு தீவிர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

கொல்லப்பட்ட சப் இன்ஸ்பெக்டரான விஜயரட்னாவினதும் பொலிஸாரான பண்டாரவினதும் சடலங்கள் செட்டிகுளம் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன.

பொலிஸார் தமது வழமையான வீதி ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த வேளை வீதியில் புதைக்கப்பட்டிருந்த கிளைமோர் வெடித்ததிலேயே இச் சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிவருகிறது.

(வ-103)

## சத்துணவு விநியோகம்

யாழ், மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் அனுசரணையுடன் யாழ், லயன் கழகத்தால் நடத்தப்படும் வாராந்த சத்துணவு விநியோக சேவை வரும் புதன்கிழமை தாவடி மேற்கு பத்திரகாளி அம்மன் சனசமூக நிலையத்தில் இடம் பெற உள்ளது.

## மட்டக்களப்பு...

னர் ஜோசப் பரராஜசிங்கம், பொன் செல்வராஜா ஆகியோருக்குச் சிறைக் கைதிகள் அவசர கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளனர்.

இதேவேளை இக்கைதிகளை நேற்று ஞாயிற்றுக் கிழமை கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர் பொன், செல்வராஜா சென்றுபார்வையிட்டார் என்பதும் இக்கைதிகளில் 16பேர் களுத்துறைச் சிறைச்சாலையிலிருந்து இங்கு இடமாற்றப்பட்டவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(ந)

## புதிய. . .

தலைப் புலிகளுடன் பேச விருப்பதாகவும், விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் தேவையானால் நோர்வேயைத் தெரிவு செய்வதா? அல்லது வேறொரு நாட்டை தெரிவு செய்வதா? என்பது பற்றி இன்னமும் அரசு தீர்மானிக்கவில்லை என்று திரு. ஜெயரத்தினா மேலும் தெரிவித்தார்.

(கு-வ)

## குருநாகல். . .

வட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் வண்டியே இக் குண்டு வெடிப்புக்கு இலக்கானதாகும்.

இக் குண்டுவெடிப்பு சம்பந்தமாக தீவிரபுலன் விசாரணைகளை மேற்கொண்டு வரும் குருநாகல் பொலிஸார் பஸ் வண்டியின் பின்பகுதியில் பெட்டி ஒன்றில் இருந்த குண்டே வெடித்ததாக தெரிவித்தனர்.

## விக்ரம்-ராஜன்-கங்கு கிண்ணத்தை பல்கலைக் கழக அணி சுவீகரித்தது

(திருநெல்வேலி)

கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகத்தின் 'விக்ரம் - ராஜன் - கங்கு' ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்தை இம்முறையும் பல்கலைக் கழக அணி சுவீகரித்துள்ளது.

நேற்று நடைபெற்ற 'விக்ரம் - ராஜன் - கங்கு' சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் கே. சீ. சீ. சீ அணியை 2 விக்கெட்டுகளால் வெற்றி கொண்டதன் மூலம் யாழ். பல்கலைக்கழக அணி வெற்றிக் கிண்ணத்தைச் சுவீகரித்துள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணி 40 ஓவர்களில் 222 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பல்கலைக் கழக அணி 37 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து 223 ஓட்டங்களை பெற்றது.

நேற்றைய ஆட்டநாய... கப் பல்கலைக் கழக... வீரர் எஸ். சாஜகான் ... செய்யப்பட்டார். (...)

## மிதிவெடியில் சிக்கி காய...

(யாழ்ப்பாணம்)

பனங்காணி ஒன்... சென்ற சீவல் தொழி... மிதிவெடியில் சிக்கி கை... கள் சிதைந்த நி... படுகாயமடைந்து ... போதனாவைத்திய ச... யில் அனுமதிக்கப்ப... ளார்.

மாதகலைச் சேர்ந்... சாமி கருணாகரன் (வய... என்பவரே தவறு த... விழுந்தபோது மிதிவெ... கையை ஊன்றியதால்... கையில் காயமடைந்... வர். (...)

## ஓயாத அலைகள் - 3 நடவடிக்கை... புலிகள் தரப்பில் உயிரிழந்தோர் ...

தொடரும் ஓயாத அலைகள் - 3 நடவடிக்கையில் தமது தரப்பில் மேலும் ஐவர் உயிரிழந்துள்ளதாக விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர். அவர்களின் பெயர் விபரம் வருமாறு.

வீரவேங்கைகளான பகீரதன் - கொழும்பு (கதிரமலை பெரியர்ராசா) ... யாழ்ப்பாணம் (... ராஜா ஜெயக்குமார்... -யாழ்ப்பாணம் (ந... சுபாஜினி) இன... யாழ்ப்பாணம் (ஆ... ஜெயரத்தினம்) ச... யாழ்ப்பாணம் (... ராஜா கலைச் செல்...

## மட்டக்களப்பில் கடந்த வருடம் ம... 116 பேர் தற்கொலையால் மர...

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த ஆண்டு 116 தற்கொலைச் சம்பவங்கள் நடைபெற்றதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இத்தற்கொலைச் சம்பவங்களுக்கான கா... ஆய்வு செய்தவர்கள்... டில் தற்போது நை... வரும் யுத்தநிலைமை... ஏற்படும் விரக்திகளே... காரணம் என்று கண்... துள்ளனர்.

## உடன் விடுதலை. . .

கள் மேற்கொண்டுள்ள பகிஷ்கரிப்புப் போராட்டம் இன்று முதல் குடாநாட்டுப் பாடசாலைகள் முழுவதுக்கும் பரவும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இவர்களது கைதுகள் மர்மமான முறையில் நடந்துள்ளதனால் கைது செய்யப்பட்டு பல நாட்கள் கடந்த பின்னரும் விடுவிக்கப்படாதது யாழ்ப்பாண மக்களிடையே பெரும் பரபரப்பையும் பீதியையும் ஏற்படுத்தியுள்ளது.

கைது செய்யப்பட்டவர்கள் விடுவிக்கப்படாததையடுத்தே பகிஷ்கரிப்பு போராட்டங்கள் கடந்த வியாழக்கிழமை முதல் மேற்படி மாணவியின் பாடசாலை மாணவர்களால் முன்னெடுக்கப்பட்டது. மறுநாள் வெள்ளிக்கிழமை அந்தப்பகிஷ்கரிப்புயாழ். நகரிலுள்ள ஒரு சில பாடசாலைகளுக்கும் நகருக்கும் வெளியே சில பாடசலைகளுக்கும் பரவியிருந்தது

இன்று முதல் குடாநாட்டிலுள்ள அனைத்துப் பாடசாலை மாணவர்களும் பகிஷ்கரிக்க வேண்டும் என்று பகிஷ்கரிப்பிலீடுபட்டுள்ள மாணவர்கள் சார்பாக அனைத்துப்பாடசாலைகளுக்கும் நேரில் சென்று கேட்டுக்கொண்டனர்.

'சகல பாடசாலை மாணவர் ஒன்றியம்' என்ற பெயரில் பாடசாலை மா... களைத் திங்கள்முதல் ... கரிக்கக் கோரும் து... பிரசுரங்கள் நேற்றுமு... முதல் குடாநாட்டில் ... லாக விநியோகிக்கப்... வருகின்றன.

இந்தத் துண்டுப்பி... தில் மாணவி பிரியா வி... கப்படும்வரை அனை... பாடசாலைகளையும் தி... கிழமைமுதல் பகிஷ்கா... மாறு கோரப்பட்டுள்ள...

இந்தக் கைதுச் சம்... யாழ். மாணவர்களின் ... காப்பினைக் கேள்வி... யாக்கியுள்ளதால் இத்த... பகிஷ்கரிப்பு மூலமே ... வர்கள் வீணாகக் ... செய்யப்படுவதைத் ... முடியும்' என்று மா... பிரதிநிதிகள் சார்பாகத்... விக்கப்படுகின்றது.

இதேவேளை மா... பிரியாவை விடுதலை ... மாறு கோரி பகிஷ்கரி... போராட்டம் நடாத்தி... யா/வயாவிளான் ம.ம... யாலயத்தைச் சேர்ந்த ... வன் ஒருவன் கடந்த வி... கிழமை உரும்பிராய் ... பிள்ளையார் கோவி... வைத்துப் படையின... தீவிரவிசாரணைக்குப்... தப்பட்டதாகவும், ... பட்டதாகவும் ... தெரிவிக்கின்றன.

இதனிடையே கை... யப்பட்டுள்ளவர்களி... தலை தொடர்பாக... காப்பு அமைச்சுடனு... இராணுவ அதிகாரிக... ஈ. பி. டி. பி. யின் ... மாவட்ட நாடா... உறுப்பினர் கே. ... திரன் (வி. கே. ... நேற்று தொடர்பு ... நிலைமைகளை வி... தாகத் தெரியவரு...

## ஐக்கிய...

கொட்டலில் நடைபெற்ற அமரர் நீலன்திருச்செல்வத்தின் பிறந்த நாள் நினைவு உரையில் முன்னாள் இந்தியப் பிரதமரான ஐ. கே.குஜ்ரால் கூறினார்.

இக் கூட்டத்தில் ஐ.நா. சபை செயலாளர் நாயகம் கொபி அனானின் செய்தியும் வாசிக்கப்பட்டது.

(கு-வ)

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரினால் இல. 15, வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம் எனும்விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000- ஆண்டு ஜனவரி மாதம் 31 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.